# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.320/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மீனாட்சி சுந்தரம் | த–பெ | புஷ்பராஜ் |
| ஊர்: | : | புதுக்கோட்டை | | |
| வயது: | : | 49/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | புதுக்கோட்டை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.02.2026**

**எதிரிகள் ஆஜர் இல்லை . மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------------

குறுக்கு விசாரணை.

1. NNL பேருந்தின் உரிமையாளர் பாண்டி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பொறுப்பாளராக இருந்தார் என்றால் சரிதான். நான் மேற்படி NNL பேருந்தில் ஓட்டுநராக வேலை செய்தேனா என்றால் செய்தேன். எதிரிகள் குறித்து எதுவும் தெரியுமா என்றால் தெரியாது. காரைக்குடியில் தனியார் பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் சங்கம் உள்ளது என்றால் சரிதான். தனியார் பேருந்தின் உரிமையாளர் சங்கத்திற்கும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் சங்கத்திற்கும் சம்பளம் பேச்சு வார்த்தை தொடர்பாக பிரச்சனை இருந்தது தெரியுமா என்றால் தெரியும். தனியார் பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துநர் சங்கத்தின் பொறுப்பாளராக எதிரிகள் இருந்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்ததாக சொன்ன அன்று நானும் NNL பேருந்தின் உரிமையாளர் பாண்டியும் காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம் என்றால் சரிதான். புகார் அளித்தபோது பாண்டி என்பவரை விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். சம்பவம் நடந்ததாக சொன்ன அன்று பாண்டி என்னுடன் மருத்துவமனைக்கு வந்தார் என்றால் சரிதான். என்னை போலீசார் காவல் நிலையத்தில் மட்டும் தான் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான்.

2. புகாரில் சொல்லிய விபரங்களை யார் எழுதினது என்றால் நான் தான்

எழுதினேன். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எனது ஓனர் பாண்டி என்பவர் சொன்னதன் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் கொடுத்து அதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.09 13:25:49 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.